September 07,2025

BSE Limited Dept of Corporate Services, Phiroze Jeejeebhoy Towers, Dalal Street, Fort, Mumbai – 400 001 **Scrip Code: 543514**	**National Stock Exchange of India Limited** The Listing Department, Exchange Plaza, Bandra Kurla Complex, Mumbai – 400 051 **Symbol: VERANDA**

Dear Sir/Madam,

Sub: <u>Submission of Newspaper Publication - Notice to Shareholders on the 7th Annual General Meeting and E-Voting Information</u>

Pursuant to Regulation 30 and 47 of SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015, please find enclosed copies of Newspaper Advertisements of Financial Express and Makkal Kural (Tamil) dated September 07, 2025, publishing the Notice of the 7th Annual General Meeting of the Company scheduled to be held on Monday September 29, 2025 through Video Conferencing/Other Audio Visual Means along with e-voting information.

Kindly take the same on record and display on the website of your exchange.

This information will also be hosted on the Company's website at https://www.verandalearning.com/web/index.php/general-meeting

Thanking you,
For Veranda Learning Solutions Limited

SWAMINADHAN BALASUNDHARAM
Digitally signed by SWAMINADHAN BALASUNDHARAM
Date: 2025.09.07 19:33:58 +05'30'

S Balasundharam
Company Secretary & Compliance Officer
M. No: ACS-11114

TIE-UP WITH STATE-OWNED DRUK GREEN

Adani Power to set up ₹6,000-cr hydro project in Bhutan

● 570-MW project to come up on Wangchhu river

RAGHAVENDRA KAMATH
Mumbai, September 6

ADANI POWER AND Bhutan's state-owned generation utility, Druk Green Power (DGPC), on Saturday signed an agreement to set up a 570 MW Wangchhu hydroelectric project in the Himalayan kingdom of Bhutan.

The Wangchhu project will see an investment of about ₹6,000 crore in setting up the renewable energy power plant and related infrastructures.

An in-principle understanding on the power purchase agreement (PPA) was also initiated. The developers also signed the concession agreement (CA) for the project with the government of Bhutan.

The agreements, signed in the presence of Bhutan Prime Minister Dasho Tshering Tobgay and Adani group chairman Gautam Adani, will pave the way for Adani Power and DGPC to initiate the implementation of the peaking run-of-river Wangchhu hydroelectric project on a BOOT (build, own, operate, transfer) model, a release from Adani Group said. With the preparation of the detailed project report already completed, construction work is expected to begin by the first half of 2026, and the completion is targeted within five years of ground-breaking, the release said.

DGPC in November last year tied up with Tata Power for the development of 5,000 MW of clean energy capacity in the Himalayan nation.

STRATEGIC PARTNERSHIP

■ Wangchhu is the first hydro project between Adani and DGPC

■ It will develop 5,000 MW of hydropower in Bhutan

■ Construction work is expected to begin by H1 2026, and will be completed in next five years

Adani Group chairman Gautam Adani (left) with Bhutan Prime Minister Tshering Tobgay, in New Delhi on Saturday PTI

GST reforms to ease tax burden, says Vaishnaw

PRESS TRUST OF INDIA
New Delhi, September 6

THE GST RATE cuts will not only benefit the common people but also boost India's economy, Union minister Ashwini Vaishnaw asserted on Saturday and hit out at the Congress, alleging "heavy burden" of tax during its term at the Centre.

The GST Council's decision to bring all products, except those under the sin and luxury goods category, under 5% and 18% slabs, while reducing it to zero on a host of essential items, will come into effect from September 22, the first day of *Navratri*.

Addressing a press conference at the BJP headquarters here, Vaishnaw said, "The coming 22nd, the first day of *Navratri*, will bring a new happiness for all of us, for all middle-class families and for 140 crore Indians."

The GST reforms will also serve as a catalyst in the economic development of the country, he said.

"This reform has brought a big relief to the lives of 140 crore people of the country. Before 2014 (during Congress rule), there was a huge burden on common people due to the web of different types of taxes imposed on every item," the information and broadcasting minister said.

Vaishnaw said the latest GST reforms and income tax exemption up to ₹12 lakh announced earlier reflected Prime Minister Narendra Modi's commitment to the welfare of common people, including middle-class families, in the country.

QUICK PICK

Hinduja Group to invest ₹7,500 cr in Tamil Nadu: Stalin

UK-BASED HINDUJA GROUP will invest ₹7,500 crore in Tamil Nadu towards cell and battery manufacturing for EVs, battery energy storage systems and EV charging stations. The investment is expected to generate over 1,000 jobs.

The investments will be done via the Group's Indian flagship Ashok Leyland, and other firms. An MoU to this effect was signed between the Hinduja Group and TN CM MK Stalin during his ongoing TN Rising Europe investment drive. **FE BUREAU**

New US tariff orders impact exports worth $15 million

FE BUREAU
New Delhi, September 6

THE US PRESIDENT Donald Trump's latest executive order on tariffs exemption covers just $15 million of Indian exports to the US, according to a study by Global Trade Research Initiative (GTRI). The order issued on Friday added to the list of products exempted from reciprocal tariffs 44 new products. These include industrial exports such as nickel, gold and other metals, as well as pharmaceutical compounds and chemicals.

India's shipments in these newly exempt items totalled just $15.2 million in 2024 — a negligible share of its overall exports to the US, founder of GTRI Ajay Srivastava said.

The affected products are highly specialised: nitrile compounds ($6.1 mn) used in pharmaceuticals and agrochemicals; nickel waste and scrap ($3.5 mn) recycled into stainless steel and batteries; lidocaine ($2.4 mn), a widely used local anesthetic; nickel powders ($1.2 mn) for catalysts and 3D printing; nickel flakes ($0.5 mn) used in conductive coatings; 3-aminomethoxybenzanilide ($0.46 mn), an intermediate for pharmaceuticals and dyes; imidazole ($0.35 mn), a building block for antifungal and anticancer drugs; and high-purity precious metal articles ($0.25 mn), used as bullion and in electronics.

With these additions, the value of India's exports to the US that are tariff-exempt rises to $28.4 billion, or 31.3% of total exports of $91.2 billion in 2024, GTRI said. It notes that the changes highlight US' use of tariffs as a trade and security tool but confirm that, for India, the commercial implications remain minimal given the limited volumes of the newly exempt products.

● **SUDHIN MATHUR,** CHIEF OPERATING OFFICER, XIAOMI INDIA

'Xiaomi is a complete ecosystem brand'

Xiaomi is synonymous with affordable smartphones in India, but the firm is increasingly positioning itself as a global ecosystem brand. In an interview with **Nandagopal Rajan, Sudhin Mathur,** *Chief Operating Officer, Xiaomi India, talks about how the company has been growing strongly, with revenues up 30% and profits up more than 35% in the last quarter. Excerpts:*

Q&A

The tablet market has had its ups and downs. How do you see the segment panning out? Is it a laptop replacement or a secondary device?

Absolutely right. I mean, the category of tablet has evolved. Over a period of time, it has probably stagnated and declined, because it's a device somewhere between a smartphone and a laptop. So I don't think it is going to replace either, especially the laptop. It is definitely a secondary device, but more so for people on the move.

With AI surging, do you see it creating new use cases and demand for devices?

Yes, absolutely. There will be larger integration in devices. Smartphones, now have Circle to Search, filters in cameras, summaries of documents you can do or ask anything. I think there are still far bigger use cases to be seen.

Xiaomi entered India as a value-for-money brand. But consumer aspirations have evolved. How do you balance affordability with rising demand for premium products?

Many categories have slowed down in terms of volume, but the premiumisation journey has already started in this country. Xiaomi as a brand is available across the spectrum. Value for money doesn't mean the cheapest. Our Pad 7 at ₹40,000 offers technology that some other brands sell at ₹1 lakh or more.

Similarly, our TVs — people used to buy 32-inch models earlier, but that segment is declining. Consumers are now shifting to QLEDs, and we just launched QLED TVs that are doing extremely well. So yes, as consumers shift preferences, Xiaomi has products across all price points — still providing cutting-edge technology at an affordable price."

Are you planning to expand your product portfolio in India, especially appliances like ACs or refrigerators?

Yeah, we keep exploring all categories. Getting a product in India is the least of our problems. But it needs to have a market fit. There has to be a go-to-market strategy, the opportunity, whether the market is saturated, or whether there is growth potential. Does it fit the masses? All those things come into our consideration. Cherry-picking stuff is easy. But large appliances need a larger strategy to think through. We still have to evaluate some of those categories.

திருச்சியில் 13ந்தேதி அரசியல் பிரச்சார பயணம் தொடங்கும் விஜய்: போலீஸ் கமிஷனரிடம் அனுமதி கேட்டு மனு

திருச்சி, செப்.7

திருச்சியில் வருகிற 13ந்தேதி அரசியல் பிரசார பயணத்தை விஜய் தொடங்க உள்ளார். இதற்கு அனுமதி கேட்டு போலீஸ் கமிஷனரிடம் மனு அளிக்கப்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டு நடைபெற உள்ள தமிழக சட்டமன்ற தேர்தலை சந்திக்க நடிகர் விஜயின் தமிழக வெற்றிக்கழகம் தீவிரமாக தயாராகி வருகிறது. ஏற்கனவே விஜய் விக்கிரவாண்டியில் தனது கட்சியின் முதல் மாநாட்டினை நடத்தினார். அதனை தொடர்ந்து கடந்த மாதம் 21 ந்தேதி மதுரை அருகே பாரபத்தியில் 2வது மாநாட்டை நடத்தினார்.

இந்நிலையில் அடுத்தக்கட்டமாக விஜய் 'மக்களுடன் சந்திப்பு' நிகழ்ச்சியை தமிழகம் முழுவதும் நடத்த இருப்பதாகவும், இதனை தமிழகத்தின் மத்திய பகுதியான திருச்சியில் இருந்து தொடங்க இருப்பதாகவும் தகவல்கள் வெளியாகின. ஆனால் த.வெ.க. சார்பில் இதுபற்றி அதிகாரப்பூர்வ அறிவிப்பு எதுவும் இதுவரை வெளியிடப்படவில்லை.

இந்நிலையில் தமிழக வெற்றிக்கழகத்தின் பொதுச் செயலாளர் புஸ்சி ஆனந்த் நேற்று காலை திடீரென விமானம் மூலம் திருச்சிக்கு வந்தார். விமான நிலையத்தில் அவருக்கு கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். பின்னர் புஸ்சி ஆனந்த் விமான நிலையத்தின் பிரதான வாயிலுக்கு எதிரில் உள்ள வரசித்தி வல்லப விநாயகர் கோவிலுக்கு சென்றார்.

அங்கு விஜய் பெயரில் சிறப்பு பூஜை நடத்தப்பட்டது. விஜய் சுற்றுப்பயணம் தொடர்பான ஒரு கோப்பு சுவாமியின் பாதத்தில் வைக்கப்பட்டது. இதனை தொடர்ந்து தீபம் ஏற்றி புஸ்சி ஆனந்த் உள்பட நிர்வாகிகள் சாமி கும்பிட்டனர்.

அதன்பின்னர் அங்கிருந்து புறப்பட்ட அவர்கள் திருச்சி மாநகர போலீஸ் கமிஷனர் அலுவலகத்திற்கு வந்தனர். அலுவலகத்திற்குள் புஸ்சி ஆனந்த் மற்றும் சில நிர்வாகிகள் மட்டும் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

மாநகர போலீஸ் கமிஷனர் காமினியை, புஸ்சி ஆனந்த் சந்தித்து பேசினார். அப்போது அவர் விஜய் பிரசாரம் தொடர்பாக ஒரு மனு கொடுத்தார்.

அந்த மனுவில், 'த.வெ.க. தலைவர் விஜய் வருகிற 13ந்தேதி திருச்சி சத்திரம் பஸ் நிலையத்தில் இருந்து அரசியல் பிரசார சுற்றுப்பயணத்தை தொடங்க திட்டமிட்டிருப்பதால், அன்றைய தினம், திருச்சி டி.வி.எஸ். டோல்கேட் தலைமை தபால் நிலைய ரவுண்டானா, மேலப்புதூர், பாலக்கரை ரவுண்டானா, பாலக்கரை வழியாக சத்திரம் பஸ் நிலையத்திற்கு சென்று, அங்கு உரையாற்ற இருப்பதால் உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்' என்று கூறப்பட்டிருந்தது.

இதையடுத்து புஸ்சி ஆனந்த் வெளியே வந்தபோது பத்திரிகையாளர்கள் அவரிடம் பேட்டி காண முயன்றனர். ஆனால் புஸ்சி ஆனந்த் எந்த பதிலும் கூறாமல் அந்த இடத்தை விட்டு வெளியே சென்றுவிட்டார். அவரை தொடர்ந்து கட்சி நிர்வாகிகளும் புறப்பட்டனர். மரக்கடை உள்ளிட்ட சில பகுதிகளை புஸ்சி ஆனந்த் பார்த்து விட்டு மீண்டும் போலீஸ் கமிஷனர் அலுவலகத்திற்கு வந்தார். பின்னர் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு அலுவலகத்திற்கும் விஜய் பிரசார பயணம் தொடர்பாக மனு கொடுப்பதற்காக சென்றார்.

இதுபற்றி போலீஸ் அதிகாரிகளிடம் கேட்ட போது, த.வெ.க. தரப்பில் வருகிற 13ந்தேதி திருச்சியில் விஜய் அரசியல் பிரசார சுற்றுப்பயணம் செல்வதற்கு திருச்சி டி.வி.எஸ். டோல்கேட்டில் இருந்து குட்ஷெட் மேம்பாலம், மேலப்புதூர், மரக்கடை வழியாக சத்திரம் பஸ் நிலையம் வரை அனுமதி கேட்டனர். ஆனால் அதற்கு அனுமதி வழங்கப்பட வில்லை. மரக்கடை பகுதி உள்பட மாநகராட்சியால் அனுமதிக்கப்பட்ட 45 இடங்களில் ஏதாவது ஒன்றில் நடத்தினால் அனுமதிக்கப்படும் என்று கூறப்பட்டது என்றனர்.

நாடு முழுவதும் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தம்: மாநில அதிகாரிகளுடன் 10ந் தேதி தேர்தல் கமிஷன் ஆலோசனை

புதுடெல்லி, செப்.7

சட்டசபை தேர்தலை எதிர்நோக்கி இருக்கும் பீகாரில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தை தேர்தல் கமிஷன் மேற்கொண்டது. இதற்கு எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பை பதிவு செய்து வருகின்றன.

எனினும் இந்த சிறப்பு திருத்தத்தை நாடு முழுவதும் மேற்கொள்ள இருப்பதாக தேர்தல் கமிஷன் தெரிவித்தது. மேலும் அடுத்த ஆண்டு (2026) சட்டசபை தேர்தல் நடைபெற இருக்கும் தமிழ்நாடு, புதுச்சேரி, கேரளா உள்ளிட்ட மாநிலங்களுக்கு இந்த ஆண்டு இறுதியில் சிறப்பு திருத்தம் நடைபெறும் என்றும் கூறியது.

இந்த நிலையில் நாடு முழுவதும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் தொடர்பாக மாநில தலைமை தேர்தல் அதிகாரிகளுடன் தேர்தல் கமிஷனர்கள் ஆலோசனை நடத்த உள்ளதாக தகவல் வெளியாகி இருக்கிறது.

அதன்படி டெல்லியில் வருகிற 10ந் தேதி மாநில தலைமை தேர்தல் அதிகாரிகளை தலைமை தேர்தல் கமிஷனர் ஞானேஷ் குமார் மற்றும் தேர்தல் கமிஷனர்கள் சந்தித்து பேசுவார்கள் என தேர்தல் கமிஷன் அதிகாரிகள் தெரிவித்தனர்.

கார்ல்மார்க்ஸ் நினைவிடத்தில் மு.க.ஸ்டாலின் மரியாதை

லண்டன், செப்.7

லண்டனில் உள்ள கார்ல்மார்க்ஸ் நினைவிடத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மரியாதை தெரிவித்தார். இதுகுறித்து அவர் தனது சமூக வலைதளப் பதிவில் கூறியிருப்பதாவது:

'தத்துவஞானிகள் இதுவரை உலகைப் பல வகைகளில் விளக்கியுள்ளனர், ஆனால் நோக்கம் என்பது அதனை மாற்றுவதுதான்'. உழைக்கும் வர்க்கத்துக்கு ஒளி வழங்கிய சிவப்புச் சூரியனாம் கார்ல்மார்க்ஸ் நினைவிடத்தில் செவ்வணக்கம் செலுத்தினேன்' என்று கூறி உள்ளார்.

SMFG Grihashakti — Nayi Asha. Naya Vishwas.

எஸ்எம்எப்ஜி இந்தியா ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்

கார்ப்பரேட் அலுவலகம் : 503 & 504, 5வது தளம், ஜி பிளாக், இன்சிப்ரே பிகேசி, பிகேசி மெயின் ரோடு, பாந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ், பாந்த்ரா (இ), மும்பை 400051. பதிவு அலுவலகம் : காமர்ஸ்சோன் ஐடி பார்க், டவர் பி, முதல் தளம், எண்.111, மவுண்ட் பூந்தமல்லி சாலை, போரூர், சென்னை 600 116, தமிழ்நாடு

அசையா சொத்து சுவாதீனம் எடுத்த அறிவிப்பு [(பிற்சேர்க்கை IV விதி 8 (1) ன் கீழ்)]

கீழே கையொப்பமிட்டுள்ள வீட்டு கடன் வசதி வழங்கும் நிறுவனமான [தேசிய வீட்டுவசதி வங்கியில் முறையாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது (முழுமையாக RBIக்கு சொந்தமானது)] **எஸ்எம்எப்ஜி இந்தியா ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டின்** (இனி SMHFC என அழைக்கப்படும்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழும் (54 ஆப் 2002), மேற்சொன்ன சட்டத்தின் 13(12)வது பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழும், 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்க) விதிகள், 3வது விதிமுறைக்கு ஏற்பவும், மேற்படி சட்டத்தின் 13(2) பிரிவின் கீழ் கடன்தாரர்களாகிய நீங்கள் (கீழே குறிப்பிடப்பட்டுள்ள பெயர்கள்) அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையையும் அதற்கான வட்டியையும் அந்த அறிவிப்பு கிடைத்த நாளிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்துமாறு கேட்டுக் கொண்டிருந்தார். கடன்தாரர்(கள்) மேற்குறிப்பிட்டுள்ள தொகையை திரும்பச் செலுத்த தவறியதால் கடன்தாரர்கள் மற்றும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் அறிவிக்கப்படுகிறது யாதெனில் கீழே கையொப்பமிட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியானவர், கீழ்க்குறிப்பிட்டுள்ள சொத்தை மேற்சொன்ன சட்டப்பிரிவு 13, துணை பிரிவு (4)ன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படியும் மற்றும் கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்க) விதிகள் 2002ன் 8வது விதிமுறைக்கு இணங்கவும் சுவாதீனம் எடுத்துக் கொண்டார். கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும், பொதுமக்களுக்கு பொதுவாகவும் எச்சரிக்கப்படுவது யாதெனில், சுவாதீனம் எடுத்துக் கொண்ட இந்த சொத்து "SMHFC"க்கு செலுத்த வேண்டிய கீழ்க்கண்ட தொகை மற்றும் வட்டிக்கும் பிணையமாக உள்ளது என்பதால், யாரும் மேற்படி சொத்து தொடர்பாக எந்தவித வில்லங்கமும் மற்றும் தொடர்புகளையும் வைத்துக் கொள்ளக் கூடாது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

வ. எண்	கடன்தாரர் / உத்தரவாததாரர் பெயர் மற்றும் கடன் கணக்கு எண்	பாதுகாக்கப்பட்ட சொத்துகளின் விவரம் (அசையா சொத்து)	கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் தொகை	சுவாதீனத் தேதி
1.	**கடன் கணக்கு எண்.** 603607510397669 **1. ஜெயம்மாள் என். 2. திரு. ரமேஷ் என். 3. உஷா எம். 4. முருகன் என். 5. ஆனந்தன் என். 6. தேவதாஸ் என். 6. ராஜா என்.**	நிலம் மற்றும் கட்டிடத்தின் சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும். மோசூர் கிராமம், அரக்கோணம் தாலுகா, வேலூர் மாவட்டம், 258.17 சதுர மீட்டர் அல்லது 2779 சதுர அடி நிலம், பழைய சர்வே எண். 330/16இல், பட்டா எண். 304இன் படி, புதிய சர்வே எண். 873/3, அரக்கோணம் பதிவு மாவட்டம் மற்றும் அரக்கோணம் இணை I சார் பதிவு மாவட்டத்திற்குள் இந்த சொத்து உள்ளது உள்ளது. எல்லைகள் வருமாறு: வடக்கு : சாலை, தெற்கு : சாலை, கிழக்கு : தனலட்சுமியின் சொத்து, மேற்கு : பாபுவின் சொத்து, விஸ்தீரணம் : கிழக்கு மேற்காக, வடக்குப் பக்கத்தில்: 19 அடி, தெற்குப் பக்கத்தில்: 16 அடி, வடக்கிலிருந்து தெற்காக, கிழக்குப் பக்கத்தில்: 156 அடி, மேற்குப் பக்கத்தில்: 157 அடி, பரப்பளவு 2779 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடம்.	13.06.2025 11.06.2025 அன்று ரூ. 8,85,744.12/ (ரூபாய் எட்டு லட்சத்து எண்பத்தைந்தாயிரத்து எழுநூற்று நாற்பத்து நான்கு & பன்னிரண்டு பைசா மட்டும்)	03.09.2025
2	**கடன் கணக்கு எண்.** 603607510429338 **1. மகேந்திரன் கே 2. மணிமேகலை கே 3. சக்தி இண்டஸ்ட்ரீஸ்**	**சொத்து – 1:** நிலம் மற்றும் கட்டிடத்தின் சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும். எண். 328/A1, பட்டா படி ச. எண். 328A/1C2n, 900 சதுர அடி பரப்பளவு கொண்டது, திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் தாலுகா, வெங்கத்தூர் கிராமத்தில், மணவாளநகர், மா.பொ.சி. தெருவில் அமைந்துள்ளது. எல்லைகள் : வடக்கு: திருமதி ஜெயலட்சுமி சொந்தமான மனை மா.பொ.சி. தெருவில் உள்ளது, கிழக்கு: மனை திரு. ரகுபதிக்குச் சொந்தமானது, மேற்கு: மனை திரு. ஜெயச்சந்திரனுக்குச் சொந்தமானது, விஸ்தீரணம் :, மேற்கு: 40.0, கிழக்கு: 40.0, தெற்கு: 22.5, வடக்கு: 22.5, மணவாளநகர் சார் பதிவு மாவட்டம் மற்றும் காஞ்சிபுரம் பதிவு மாவட்டத்தில் அமைந்துள்ளது. **சொத்து – 2:** நிலம் மற்றும் கட்டிடத்தின் சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும். மனை எண்.47, எண். 328/A1E3, 900 சதுர அடி பரப்பளவு கொண்டது, திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் தாலுகா, வெங்கத்தூர் கிராமத்தில், மணவாளநகர், கணேசபுரம் மா.பொ.சி. தெருவில் அமைந்துள்ளது. எல்லைகள் : வடக்கு: வீடு திரு. ஜோசப்நாயுடுவுக்குச் சொந்தமானது, தெற்கு: நிலம் திரு. மகேந்திரனுக்குச் சொந்தமானது, கிழக்கு: வீடு திரு. ஞானசேகருக்குச் சொந்தமானது, மேற்கு: நிலம் திரு. ஜெயச்சந்திரனுக்குச் சொந்தமானது, விஸ்தீரணம்:, மேற்கு : 40.0 அடி, கிழக்கு : 40.0 அடி, தெற்கு : 22.5 அடி, வடக்கு : 22.5 அடி.	13.06.2025 11.06.2025 அன்று ரூ. 31,71,291/– (ரூபாய் முப்பத்தொரு லட்சத்து எழுபத்தொரு ஆயிரத்து இருநூற்று தொண்ணூற்றொன்று மட்டும்)	03.09.2025

இடம் : வேலூர் / திருவள்ளூர், தமிழ்நாடு
தேதி : 03.09.2025

ஒப்பம்/– அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
எஸ்எம்எப்ஜி இந்தியா ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்

SMFG Grihashakti — Nayi Asha. Naya Vishwas.

எஸ்எம்எப்ஜி இந்தியா ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்

கார்ப்பரேட் அலுவலகம் : 503 & 504, 5வது தளம், ஜி பிளாக், இன்சிப்ரே பிகேசி, பிகேசி மெயின் ரோடு, பாந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ், பாந்த்ரா (இ), மும்பை 400051. பதிவு அலுவலகம் : காமர்சோன் ஐடி பார்க், டவர் பி, 1வது தளம், எண். 111, மவுண்ட் பூந்தமல்லி சாலை, போரூர், சென்னை 600116, தமிழ்நாடு

கோரிக்கை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 ('' சட்டம்'') மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) சட்டம் 2002 (''விதிகள்'') கீழ், கீழ்க்கையொப்பமிட்ட **எஸ்எம்எப்ஜி இந்தியா ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டின்** (இனி SMHFC என அழைக்கப்படும்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள் சட்டத்தின் கீழும், மேற்சொன்ன சட்டத்தின் 13(12)வது பிரிவின் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படியும் மற்றும் விதி 3–ன் கீழும், சட்டப்பிரிவு 13(2)ன் கீழும் கீழ்க்காணும் கடன்தாரர்களுக்கு கோரிக்கை அறிவிப்பை அனுப்பி அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டிருந்த தொகையை அறிவிப்பு கிடைத்த 60 நாட்களுக்குள் திரும்ப செலுத்துமாறு கேட்டுக் கொண்டிருந்தார். கடன்தாரர்கள் கோரிக்கை அறிவிப்புகளின் சேவையைத் தவிர்க்கிறார்கள் என்று கீழ்க்கையொப்பமிடப்பட்டவர் நம்புகிறார். எனவே, விதிகளின்படி அறிவிப்பின் சேவை ஒட்டுதல் மற்றும் வெளியீடு மூலம் செயல்படுத்தப்படுகிறது. கோரிக்கை அறிவிப்பின் உள்ளடக்கங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன.

வ. எண்	கடன் கணக்கு எண் & கடன்தாரர் / உடன் கடன்தாரர் சொத்து வைத்திருப்பவர்கள் பெயர்	பாதுகாக்கப்பட்ட சொத்துகளின் விவரம் / அடமான சொத்து	13 (2)ன் கீழ் கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் நிலுவைத் தொகை
1.	**கடன் கணக்கு எண் :** 603607210206967 **1. பாஸ்கரன் கே 2. ராஜேஸ்வரி எஸ் முகவரி : எண். 2/263, காமராஜர் தெரு, பாடியநல்லூர், சென்னை 600052**	நிலம் மற்றும் கட்டிடத்தின் சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும். வடக்குப் பக்கம் மனை எண்.25, ராசி கார்டன், சோத்துப்பாக்கம் கிராமம், பொன்னேரி தாலுகா, திருவள்ளூர் மாவட்டம், 700 சதுர அடி நிலத்தை உள்ளடக்கியது, பழைய சர்வே எண்.18/2ல், பட்டா புதிய சர்வே எண்.18/3இன் படி, ரெட்ஹில்ஸ் சார் பதிவு மாவட்டம் மற்றும் வட சென்னை பதிவு மாவட்டத்திற்குள் உள்ளது. எல்லைகள் : வடக்கு: மனை எண்.26 தெற்கு: சொத்து பாலமுருகனுக்குச் சொந்தமானது கிழக்கு: 20 அடி சாலை மேற்கு: மனை எண்.24. விஸ்தீரணம் வடக்குப் பக்கத்தில்: 35 அடி தெற்குப் பக்கத்தில்: 35 அடி கிழக்குப் பக்கத்தில்: 20 அடி மேற்குப் பக்கத்தில்: 20 அடி 700 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடம்	21-08-2025 09-08-2025 அன்று ரூ. 3,51,918.99 (ரூபாய் மூன்று லட்சத்து ஐம்பத்து ஒன்றாயிரத்து தொள்ளாயிரத்து பதினெட்டு & தொண்ணூற்று ஒன்பது பைசா மட்டும்) என்பிஏ தேதி : 05-08-2025
2	**கடன் கணக்கு எண்:** 615839211682831 **1. சசிதரன் சரவணன் 2. சரண்ராஜ் ஆர் & ஜியோஜி ஃபுட்ஸ் 3. சரவணன் ராகவன் 4. தனலட்சுமி சரவணன் முகவரி: எண். 194, 3வது பிரதான சாலை, திருவள்ளுவர் நகர், தண்டையார்பேட்டை, சென்னை 600081, தமிழ்நாடு**	நிலத்தின் சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும். பிளாட் எண்.T–3, மூன்றாவது தளம்,""கரண் அபார்ட்மெண்ட்ஸ்" கவர்டு கார் பார்க்கிங் இடம், ""T3"" எனக் குறிக்கப்பட்ட ஸ்டில்ட் தளம் மற்றும் வசதிகளுடன் 325.279 சதுர அடி நிலத்தில் பிரிவுபடாத பங்கு நிலம் 712 சதுர அடியை உள்ளடக்கி உள்ளது. இந்த சொத்தானது பழைய கதவு எண்.30, பின்னர் எண்.90, புதிய எண்.20, நாட்டுமுத்து நாயக்கன் தெரு, தேனாம்பேட்டை, சென்னை 600 018 (சொத்து வரி ரசீது கதவு எண்.20(90), நாட்டுமுத்து நாயக்கன் தெரு, தேனாம்பேட்டை, சென்னை 600 018 படி) ஆர்.எஸ்.எண்.1462, தேனாம்பேட்டை கிராமத்தின் பிளாக் எண்.29ல் உள்ளது. விஸ்தீரணம் 1 கிரவுண்ட் மற்றும் 1512 சதுர அடி, அல்லது 3912 சதுர அடி, அதன் மேல் உள்ள கட்டிடம் மற்றும் வசதிகளுடன் இந்த நிலம் உள்ளது. அதன் எல்லைகள் : வடக்கு: ஆர்.எஸ்.எண்.1450/2, இப்போது ஆர்.எஸ்.எண்.1450/1 தெற்கு: ஆர்.எஸ்.எண்.1467 மற்றும் நாட்டு முத்து நாயக்கன் தெரு கிழக்கு: ஆர்.எஸ்.எண்.1461/1 மற்றும் 1461/2 மேற்கு: ஆர்.எஸ். எண்.1463 விஸ்தீரணம்: கிழக்கிலிருந்து மேற்காக வடக்குப் பக்கத்தில்: 24 அடி கிழக்கிலிருந்து மேற்காக தெற்குப் பக்கத்தில்: 24 அடி வடக்கிலிருந்து தெற்காக கிழக்குப் பக்கத்தில்: 162 அடி வடக்கிலிருந்து தெற்காக மேற்குப் பக்கத்தில்: 158 அடி இந்த சொத்தானது இணை I மத்திய சென்னை சார் பதிவு மாவட்டம் மற்றும் மத்திய சென்னை பதிவு மாவட்டத்தில் அமைந்துள்ளது.	21-08-2025 09-08-2025 அன்று ரூ. 90,91,498.58 (ரூபாய் தொண்ணூறு லட்சத்து தொண்ணூற்று ஒரு ஆயிரத்து நானூற்று தொண்ணூற்று எட்டு & ஐம்பத்தெட்டு பைசா மட்டும்) என்பிஏ தேதி : 05-08-2025
3	**கடன் கணக்கு எண்:** 615839511262953 **1. ஷாகுல் ஹமீது சி எம் 2. நஸ் ரீன் பாத்திமா சி எஸ் முகவரி: எண். 11, அம்பேத்கர் சாலை, ராஜ ராஜேஸ்வரி நகர், மடிப்பாக்கம், சென்னை 600091, தமிழ்நாடு**	நிலத்தின் சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும் கடை மற்றும் கீழ் தளம் விஸ்தீரணம் 269.84 சதுர அடி மற்றும் பிளாட் இரண்டாவது தளத்தில் உள்ளது. விஸ்தீரணம் 810.69 சதுர அடி மொத்த நிலத்தில் பிரிவுபடாத பங்கு நிலம் 432 சதுர அடி உள்ளடக்கி உள்ளது. சென்னை மாவட்டம், மடிப்பாக்கம் கிராமம், சோழிங்கநல்லூர் தாலுகா, மனை எண்.11 (மேற்கு பகுதி), 2892 சதுர அடியில் பிரிவுபடாத பங்கு நிலம் 975 சதுர அடி சர்வே எண்கள்: 199/6 & 199/7ல் அமைந்துள்ளது, ஒப்புதல் எண். LP/DTCP எண்.105/91. நிலத்தின் எல்லைகள் : வடக்கு: மனை எண்.10 திருமதி. ஜே. உமாராணிக்கு சொந்தமானது தெற்கு: மனை எண்.12 கிழக்கு: மனை எண்.11B மேற்கு: 30 அடி சாலை, வேளச்சேரி சார் பதிவு மாவட்டம் மற்றும் தென் சென்னை பதிவு மாவட்டத்தில் அமைந்துள்ளது.	21-08-2025 09-08-2025 அன்று ரூ. 45,08,731.22 (ரூபாய் நாற்பத்தைந்து லட்சத்து எட்டாயிரத்து எழுநூற்று முப்பத்தொன்று & இருபத்தி இரண்டு பைசா மட்டும்) என்பிஏ தேதி : 05-08-2025
4	**கடன் கணக்கு எண்:** 603639511322065 **1. சந்திரசேகரன் ஆர் 2. ஷீலா சந்திரசேகரன் முகவரி: பிளாட் எண். 315 பி, ஸ்ரீநிவாசா நகர், கம்பர் தெரு, பள்ளிக்கரணை, சென்னை, தமிழ்நாடு 600100**	அசையா சொத்தின் சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும். சென்னை 600 002, ஜெசன் தெரு, உட்ஸ் சாலை, கதவு எண்.4 (பழைய கதவு எண்.6/7) மற்றும் கதவு எண்.3 (பழைய கதவு எண்.5) இல் அமைந்துள்ள கட்டிடத்தின் முதல் மாடியில் (முன் பக்கம்) பிளாட்/கடை எண்.C இல் அமைந்துள்ள 574 சதுர அடி அல்லது அதற்கு மேற்பட்ட பரப்பளவைக் கொண்ட ஒரு அபார்ட்மெண்ட்/கடை அதனுடன் 187 சதுர அடி (8400 சதுர அடியில் 574 சதுர அடி) பிரிக்கப்படாத பங்கு உரிமை மற்றும் பாத்தியதை, 2729 சதுர அடி அல்லது அதற்கு அருகில், இது 2158 சதுர அடி கொண்டது. இந்த சொத்தானது ஓ.எஸ்.எண்.34, சி.சி.எண்.4351 (பகுதி) மற்றும் ஆர்.எஸ்.எண்.297/1 மற்றும் 571 சதுர அடி ஓ.எஸ்.எண்.34 (பகுதி) சி.சி.எண்.4351 (பகுதி) மற்றும் ஆர்.எஸ்.எண்.297/6, திருவல்லிக்கேணி கிராமம், மயிலாப்பூர் திருவல்லிக்கேணி தாலுகா, திருவல்லிக்கேணி சார் பதிவு மாவட்டத்திற்குள் மற்றும் சென்னை மத்திய பதிவு மாவட்டத்தில் உள்ளது. நிலத்தின் எல்லைகள் : வடக்கு: இந்த அட்டவணையின் அயிட்டம் எண்.2 இல் விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்கு செல்லும் தனியார் பாதை தெற்கே: குமார் அலியின் வீடு கிழக்கு: இந்த அட்டவணையின் அயிட்டம் எண்.2இல் உள்ள சொத்து மேற்கே: ஜெசன் தெரு. இந்த சொத்தானது மத்திய சென்னை பதிவு மாவட்டம் மற்றும் திருவல்லிக்கேணி பதிவு மாவட்டத்தில் அமைந்துள்ளது.	21-08-2025 13-08-2025 அன்று ரூ. 44,37,451.96 (ரூபாய் நாற்பத்து நான்கு லட்சத்து முப்பத்தேழாயிரத்து நானூற்று ஐம்பத்தொன்று & தொண்ணூற்று ஆறு பைசா மட்டும்) என்பிஏ தேதி : 05-08-2025

கடன்தாரர்கள் கோரிக்கை அறிவிப்புகளுக்கு இணங்கவும், அதில் குறிப்பிடப்பட்டுள்ள கோரிக்கைத் தொகையை இந்த வெளியீட்டின் தேதியிலிருந்து 60 நாட்களுக்குள், திரும்ப செலுத்தும் காலம் வரை பொருந்தக்கூடிய வட்டி, கூடுதல் வட்டி, பவுன்ஸ் கட்டணங்கள் மற்றும் செலவுகள் ஆகியவற்றுடன் செலுத்துமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். SMHFC ஒரு ஈடுபெற்ற கடன் அளித்தவர் என்பதையும், கடன்தாரர்கள் பெறும் கடன் வசதி என்பது கடன்தாரர்கள் அடமானம் வைத்திருக்கும் அசையாச் சொத்து/சொத்துக்களுக்கு எதிரான ஈடுபெற்ற கடனாகும் என்பதை கடன்தாரர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

கடன்தாரர்கள் நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் தங்கள் கடன்களை முழுமையாக கட்டத் தவறினால், விற்பனையின் மூலமாக மாற்றல் அல்லது சட்டம் மற்றும் அதற்கான விதிகளின்கீழ் கிடைக்கக்கூடிய வேறு ஏதேனும் ஒரு தீர்வைப் பயன்படுத்துவதன்மூலமாகவும் பாக்கித்தொகையை பெற ஈடுபெற்ற சொத்துக்களை கையகப்படுத்த சட்டப்பிரிவு 13(4)ன் கீழ் அனைத்து உரிமைகளையும் பயன்படுத்த SMHFCக்கு உரிமை உண்டு. விற்பனை அல்லது பரிமாற்ற உரிமையை அமல்படுத்துவதற்கு முன், ஈடுபெற்ற சொத்துக்களை இணைக்கவும்/அல்லது முத்திரையிடவும் SMHFC க்கு அதிகாரம் உள்ளது. ஈடு பெற்ற சொத்துக்கள் விற்பனைக்குப் பிறகு, SMHFCக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையை ஈடு செய்ய அடமானம் செய்யப்பட்ட சொத்துக்களின் மதிப்பு போதுமானதாக இல்லாவிட்டால், மீதமுள்ள நிலுவைத் தொகையை மீட்க தனி சட்ட நடவடிக்கைகளை எடுக்க SMHFCக்கு உரிமை உண்டு. வேறு எந்த சட்டத்தின் கீழும் SMHFCக்கு கிடைக்கக்கூடிய மற்ற அனைத்து தீர்வுகளிலிருந்தும் கூடுதலாகவும் சுயாதீனமாகவும் இந்த தீர்வு உள்ளது. சட்டப் பிரிவு 13(8)–ன் கீழ், கால அவகாசம் உள்ளதால் ஈடுபெற்ற ஆஸ்திகளை மீட்டிக் கொள்ள கடன்தாரர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது. மேலும் சட்டத்தின் பிரிவு 13(13)ன்கீழ், கடன்தாரர்கள் ஈடுபெற்ற சொத்துக்களை அப்புறப்படுத்துவதற்கோ அல்லது கையாள்வதற்கோ தடை விதிக்கப்பட்டுள்ளது அல்லது விற்பனை, குத்தகை அல்லது வேறுவிதமாக மாற்றுவதை (சாதாரண வர்த்தகத்தை தவிர) SMHFC–ன் முன் எழுத்துப்பூர்வ அனுமதியின்றி மேற்கொள்ளக்கூடாது. மேற்கூறியவாறு நடக்காதபட்சத்தில் அது அந்தச் சட்டத்தின் பிரிவு 29ன் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும். கோரிக்கை அறிவிப்பின் நகல் கீழ்கையொப்பமிடப்பட்டவரிடம் கிடைக்கிறது. மேலும் கடன்தாரர்கள் விரும்பினால், எந்த வேலை நாளிலும் சாதாரண அலுவலக நேரங்களில் கீழ்க்கையொப்பமிடப்ப ட்டவரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

இடம் : சென்னை, தமிழ்நாடு
தேதி : 21.08.2025

ஒப்பம்/– அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
எஸ்எம்எப்ஜி இந்தியா ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டிற்காக

ENROLLMENT NOTICE

I, After 10 days of the publication of this notice and within three months there after. I, GEETHANJALI R, D/o. RAJA, aged 26 years, permanently residing at No. 5/167, KOYANKOLLAI VILLAGE, MALLAGUNDA POST, NATRAMPALLI TK, TIRUPATTUR DISTRICT – 635852. intend having my enrolment as an Advocate moved before the Bar Council of Tamilnadu, Bar Council Building, High Court Campus, Chennai -600 104. Those who have any valid objections may, notify the same to the Bar Council with in ten days.

GEETHANJALI R

ENROLLMENT NOTICE

I, After 10 days of the publication of this notice and within three months there after. I, B.THENMOZHI, W/O. SUNDARAJAN, aged 36 years, permanently residing at NO.106, TNHB PHASE II, TIRUPATTUR DISTRICT– 635601. intend having my enrolment as an Advocate moved before the Bar Council of Tamilnadu, Bar Council Building, High Court Campus, Chennai -600 104. Those who have any valid objections may, notify the same to the Bar Council with in ten days.

B.THENMOZHI

ஏல அறிவிப்பு

K.S.Pankaj, 8/18, Rajiv Gandhi Nagar, Thiruvottiyur, Chennai-19 என்ற அடகு வணிகர் வசம் நாள் 01.01.2023 முதல் 30.06.2024 முடிய காலஅளவில் அடகு வைக்கப்பட்டு காலங்கடந்தும் மீட்கப்படாத பொருட்கள் நாள் 17.09.2025 அன்று காலை 11 மணியளவில் மேலே குறிப்பிட்ட விலாசத்தில் Thiruvottiyur வட்டாட்சியர் அல்லது துணை வட்டாட்சியர் அவர்கள் முன்னிலையில் ஏலதாரர் **பாஃப்னா ஆக்ஷீனியர்ஸ்** ஏலம் போடுவார்

★★★★★★

Maruti, 34, Nethaji Nagar Main Road, Tondiarpet, Chennai-81 என்ற அடகு வணிகர் வசம் நாள் 01.01.2023 முதல் 31.07.2024 முடிய காலஅளவில் அடகு வைக்கப்பட்டு காலங்கடந்தும் மீட்கப்படாத பொருட்கள் நாள் 18.09.2025 அன்று காலை 11 மணியளவில் மேலே குறிப்பிட்ட விலாசத்தில் Tondiarpet வட்டாட்சியர் அல்லது துணை வட்டாட்சியர் அவர்கள் முன்னிலையில் ஏலதாரர் **பாஃப்னா ஆக்ஷீனியர்ஸ்** ஏலம் போடுவார்

★★★★★★

Mamtha, 406/16, Muthamil Street, Periyar Nagar, Vysarpadi, Chennai-39 என்ற அடகு வணிகர் வசம் நாள் 01.01.2021 முதல் 31.12.2023 முடிய காலஅளவில் அடகு வைக்கப்பட்டு காலங்கடந்தும் மீட்கப்படாத பொருட்கள் நாள் 17.09.2025 அன்று காலை 2 மணியளவில் மேலே குறிப்பிட்ட விலாசத்தில் Perambur வட்டாட்சியர் அல்லது துணை வட்டாட்சியர் அவர்கள் முன்னிலையில் ஏலதாரர் **பாஃப்னா ஆக்ஷீனியர்ஸ்** ஏலம் போடுவார்

★★★★★★

TAKE® Enabling Business Efficiencies

டேக் சொல்யூஷன்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம் : எண்.56, பழைய எண். 116, 4வது தளம், ராகாஸ் கட்டிடம், டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை, மயிலாப்பூர், சென்னை–600 004, ஈமெயில் : secretarial@takesolutions.com | இணையதளம் : www.takesolutions.com தொ.பே. : 044-48592901 | CIN: L63090TN2000PLC046338

24வது வருடாந்திர பொதுக் (AGM) கூட்டம் மற்றும் மின்னணுவாக்குப்பதிவு தகவல் பற்றிய அறிவிப்பு

டேக் சொல்யூஷன்ஸ் நிறுவன பங்குதாரர்களின் இருபத்தி நான்காம் பொதுக் கூட்டம், அதன் அறிவிப்பில் தரப்பட்டுள்ள அலுவல்களை மேற்கொள்ள, **செவ்வாய்கிழமை, செப்டம்பர் 30, 2025 அன்று இந்திய நேரம் மாலை 4.30 மணிக்கு,** வீடியோ கான்ஃபெரன்சிங் (VC)/பிற ஆடியோ விஷுவல் முறைகள் (OAVM) மூலம் நடைபெறும் என்று அறிவிக்கப்படுகிறது. எண்.56, பழைய எண். 116, 4வது தளம், ராகாஸ் கட்டிடம், டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை, மயிலாப்பூர், சென்னை–600 004 என்ற முகவரியிலுள்ள நிறுவனத்தின் பதிவு அலுவலகத்தில் கூட்டம் செயல்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் தொடர்பாக **செப்டம்பர் 19, 2024 தேதியிட்ட சுற்றறிக்கை எண். 09/2024, செப்டம்பர் 25, 2023 தேதியிட்ட சுற்றறிக்கை எண். 09/2023, டிசம்பர் 28, 2022 தேதியிட்ட சுற்றறிக்கை எண். 11/2022, மே 5, 2022 தேதியிட்ட சுற்றறிக்கை எண்.02/2022, டிசம்பர் 14, 2021 தேதியிட்ட சுற்றறிக்கை எண். 21/2021 சுற்றறிக்கைகளுடன் வாசிக்க வேண்டிய மே 5, 2020 தேதியிட்ட சுற்றறிக்கை எண். 20/2020, ஏப்ரல் 13, 2020 தேதியிட்ட சுற்றறிக்கை எண்.17/2020, ஏப்ரல் 8, 2020 தேதியிட்ட சுற்றறிக்கை எண்.14/2020** "MCA சுற்றறிக்கைகள்'' என்று குறிப்பிடப்படுகிறது) ஒரு பொதுவான இடத்தில் பங்குதாரர்கள் நேரடியாகக் கலந்து கொள்ளாமல், VC/OAVM முறையின்மூலம் நடத்த அனுமதி அளித்துள்ளது. அதன்படி, AGMஐ VC/OAVM மூலம் நடத்தவும், பொருந்தக்கூடிய சுற்றறிக்கைகளுடன் வாசிக்கப்பட்ட சட்டத்தின் பொருந்தக்கூடிய விதிகளுக்கு இணங்க, மின்னணு முறையில் வாக்களித்து அலுவல்களை பரிவர்த்தனை செய்யவும் இயலும். கட்–ஆஃப் தேதி, அதாவது, **திங்கட்கிழமை, செப்டம்பர் 22, 2025,** அன்று உறுப்பினர்கள் பதிவேட்டில் அல்லது டெபாசிடரிகளால் பராமரிக்கப்படும் பயனடையும் உரிமையாளர்களின் பதிவேட்டில் பெயர் பதிவு செய்யப்பட்ட நபருக்கு மட்டுமே 'தொலைதூர மின்னணு வாக்களிப்பு' அல்லது AGMல் வாக்களிக்க வசதியளிக்கப்படும். மின்னணு முறையில் தொலைதூர மின்னணு வாக்களிப்பு அல்லது AGM அன்று வாக்களிப்பதை எளிதாக்குவதற்காக, நிறுவனம் சென்ட்ரல் டெபாசிடரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட் (CDSL)ஐ ஈடுபடுத்தியுள்ளது. VC/OAVM மூலம் AGMல் கலந்துகொள்வது குறித்த விரிவான வழிமுறைகளுக்கு, பங்குதாரர்கள் AGM அறிவிப்பினை பார்க்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். பொருந்தக்கூடிய சுற்றறிக்கைகள் மற்றும் நிறுவனங்கள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள், 2014, விதி 20–ன்படி, மின்னஞ்சல் முகவரியை நிறுவனத்தில்/ பதிவாளர் மற்றும் பரிமாற்ற முகவர்கள் அல்லது வைப்புத்தொகை பங்கேற்பாளர்(கள்)–இடம் பதிவு செய்துள்ள பங்குதாரர்களுக்கு, 2024–25ம் ஆண்டு அறிக்கை மற்றும் 24வது AGM அறிவிப்பு, மின்னணு முறையில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட ஆவணங்கள் நிறுவனத்தின் **https://www.takesolutions.com/Reports_Filings_2024-25/TAKE_Solutions_AGM_Notice_2025.pdf and https://www.takesolutions.com/Reports_Filings_2024-25/TAKE_Solutions_Annual_Report_2024-2025.pdf,** பிஎஸ்இ லிமிடெட்–ன் **www.bseindia.com,** நேஷனல் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் ஆஃப் இந்தியாவின் **www.nseindia.com** மற்றும் **CDSL https://www.evotingindia.com** இணையதளங்களிலும் கிடைக்கப் பெறும். பங்குதாரர்களுக்கு இதன்மூலம் தெரிவிக்கப்படுவதாவது:

I. தொலைதூர மின்னணு வாக்களிப்பு காலம், **வெள்ளிக்கிழமை, செப்டம்பர் 26, 2025 காலை 9.00 மணிக்கு** துவங்கி, **திங்கட்கிழமை, செப்டம்பர் 29, 2025 மாலை 5.00 மணிக்கு** முடிவுறும். தொலைதூர மின்னணு வாக்களிப்பு, மேற்குறிப்பிட்ட காலத்திற்குபின் அனுமதிக்கப்படமாட்டாது என்பதை பங்குதாரர்கள் கவனிக்கவும்.

II. இந்த காலகட்டத்தில், கட்–ஆஃப் தேதியான **திங்கட்கிழமை, செப்டம்பர் 22, 2025** அன்று பங்குகளை நேரடி வடிவத்தில் அல்லது டிமெடீரியல் செய்யப்பட்ட வடிவத்தில் வைத்திருக்கும், தற்போதுள்ள பங்குதாரர்கள் மற்றும் அறிவிப்பை அனுப்பிய பின் பங்குகளை வாங்கி நிறுவனத்தின் பங்குதாரர்களானவர்கள், AGM அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வணிகங்களுக்கு, CDSL மூலம் மின்னணு முறையில் வாக்களிக்கலாம்.

III. AGMக்கு முன் தொலைதூர மின்னணு வாக்களிப்பு செய்த பங்குதாரர்கள், VC/OAVM மூலம் AGMல் கலந்து கொள்ளலாம்/பங்கேற்கலாம், ஆனால் அவர்களால் மீண்டும் வாக்களிக்க இயலாது.

IV. CDSL மின்னணு வாக்களிப்பு முறையினை, **https://www.evotingindia.com** என்ற இணையதள இணைப்பில், பங்குதாரர்கள் லாக்–இன் பகுதியின்கீழ் பெறலாம். தொலைதூர மின்னணு வாக்களிப்பு மற்றும் AGMல் மின்னணு வாக்களிப்பு பற்றிய விரிவான வழிமுறைகள் AGM அறிவிப்பில் தரப்பட்டுள்ளன.

V. பங்குதாரர்கள், VC/OAVM மூலம் AGMல் கலந்து கொள்ள, கூட்டம் துவங்கும் நேரத்திற்கு 15 நிமிடங்களுக்கு முன்பு வரையும், பின்னர் 15 நிமிடங்களுக்கு பின்பு வரையும் அனுமதிக்கப்படுவர்.

VI. டெபாசிடரிகளிடம் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்யாத பங்குதாரர்கள், மின்னணு வாக்களிப்பிற்கு லாக்–இன் விவரங்களைப் பெற, அறிவிப்பில் தரப்பட்டுள்ள விவரங்கள் மற்றும் ஆவணங்களை, **investorrelations@takesolutions.com** என்ற நிறுவன முகவரிக்கு அல்லது **rnt.helpdesk@linkintime.co.in** என்ற RTAன் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பிப் பெறலாம்.

VII. AGM அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள் ஆய்வுக்கு கிடைக்கப் பெறும். **investorrelations@takesolutions.com** என்ற நிறுவன முகவரிக்கு பங்குதாரர்கள் எழுதலாம்.

VIII. மின்னணு வாக்குப்பதிவு செயல்முறையை நியாயமான மற்றும் வெளிப்படையான முறையில் ஆய்வு செய்வதற்காக, பயிற்சி நிறுவனச் செயலாளர் (உறுப்பினர் எண். F10357 மற்றும் பயிற்சிச் சான்றிதழ் எண். 13620) திரு. அசோக் அஜய் குமார் பாட்டியா, ஆய்வாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

IX. நிறுவனத் தலைவர் அவர்கள் முடிவுகளை அறிவித்த பின், அறிவிக்கப்பட்ட முடிவுகள், ஆய்வாளரின் அறிக்கையுடன் **www.takesolutions.com** என்ற நிறுவன இணையதளத்திலும், **www.evotingindia.com** என்ற CDSL இணையதளத்திலும் வெளியிடப்படும்.

வினாக்கள் அல்லது பிரச்சனைகள் ஏதேனுமிருப்பின் அவைகளை, அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் (FAQகள்) மற்றும் **www.evotingindia.com**ல் உள்ள மின்னணு வாக்களிப்பு கையேட்டில், உதவிப் பிரிவின்கீழ் பார்க்கலாம் அல்லது **helpdesk.evoting@cdslindia.com** என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பலாம் அல்லது Toll Free: 1800 22 55 33 என்ற எண்களை அழைக்கலாம் அல்லது திரு ராகேஷ் தல்வி, முதுநிலை மேலாளர், சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) (CDSL) லிமிடெட் அவர்களைத் தொடர்பு கொள்ளலாம்.

இயக்குநர் குழு ஆணைப்படி
டேக் சொல்யூஷன்ஸ் லிமிடெட்டிற்காக
ஒப்பம்/–
வேதாமிர்தம் வெங்கடேசன்
நிர்வாக இயக்குநர் & தலைமை நிதி அதிகாரி

இடம் : சென்னை
தேதி : செப்டம்பர் 06, 2025

இந்தியன் மெடிக்கல் சென்டர்

பதிவு எண். 236/1976

பதிவு அலுவலகம்: எண். 218 (பழைய எண். 283), டி.டி.கே. சாலை, ஆழ்வார்பேட்டை, சென்னை – 18.
நிர்வாக அலுவலகம்: எண். 190 (பழைய எண். 116), ஜி.ஏ. சாலை, சென்னை – 21.

அறிவிப்பு

சங்கத்தில் உள்ள அறிவிப்புப் பலகையில் ஒட்டப்பட்டுள்ள அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவல்களை பரிவர்த்தனை செய்வதற்காக, இந்தியன் மெடிக்கல் சென்டரின் வருடாந்திரப் பொதுக் கூட்டம், பதிவு அலுவலகம் : எண். 218 (பழைய எண். 283), டி.டி.கே. சாலை, ஆழ்வார்பேட்டை, சென்னை – 18–ல் செப்டம்பர் 29, 2025 திங்கட்கிழமை அன்று மாலை 4.00 மணிக்கு நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

இந்தியன் மெடிக்கல் சென்டர்–க்காக
G. சீதாராமன்
செயலாளர்

இடம் : சென்னை
தேதி : 07.09.2025

Veranda

வெராண்டா லேர்னிங் சொல்யூஷன்ஸ் லிமிடெட்

(CIN : L74999TN2018PLC125880)

பதிவு அலுவலகம்: ஜி. ஆர். காம்ப்ளக்ஸ், முதல் தளம், எண்.807 - 808, அண்ணாசாலை, நந்தனம், சென்னை 600 035
Ph: 044-4690 1007 | www.verandalearning.com

7வது வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பு

வெராண்டா லேர்னிங் சொல்யூஷன்ஸ் லிமிடெட்டின் (''நிறுவனம்'') உறுப்பினர்களுக்கான 7வது **வருடாந்திர பொதுக் கூட்டம் ('AGM') திங்கட்கிழமை, 29 செப்டம்பர், 2025 அன்று காலை 11.30 மணிக்கு காணொலி காட்சி ('VC')/பிற ஆடியோ காட்சி முறை ('OAVM')** மூலம் நடைபெறும் என்று இந்த அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்படுகிறது. இது செப்டம்பர் 19, 2024 தேதியிட்ட பொது சுற்றறிக்கை மற்றும் கார்ப்பரேட் விவகார அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட முந்தைய சுற்றறிக்கைகள் ("MCA சுற்றறிக்கைகள்"), அத்துடன் செக்யூரிட்டீஸ் அண்ட் எக்ஸ்சேஞ்ச் போர்டு ஆப் இந்தியா (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) விதிமுறைகள், 2015 ("SEBI LODR") ஒழுங்குமுறை 44 மற்றும் பிற பொருந்தக்கூடிய விதிகள், டிசம்பர் 13, 2024 தேதியிட்ட SEBI ("SEBI சுற்றறிக்கைகள்") மற்றும் முந்தைய SEBI சுற்றறிக்கைகளுக்கு இணங்க உள்ளது. வருடாந்திர பொதுக் கூட்டத்தைக் (AGM) கூட்டும் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வணிகம்(கள்) தொடர்பாக வெராண்டா லேர்னிங் சொல்யூஷன்ஸ் லிமிடெட்அதன் உறுப்பினர்களின் ஒப்புதலைக் கோருகிறது.

MCA சுற்றறிக்கைகள் மற்றும் SEBI சுற்றறிக்கைகளுக்கு இணங்க, வருடாந்திர அறிக்கை மற்றும் வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பு செப்டம்பர் 06, 2025 அன்று மின்னணு முறையில் பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவர் அல்லது அவர்களது தொடர்புடைய வைப்புத்தொகை பங்கேற்பாளர்(கள்) ஆகியோரிடம் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்துள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் மட்டுமே அனுப்பப்பட்டுள்ளது.

தொலைதூர மின்னணு வாக்களிப்பு: நிறுவனங்கள் சட்டம், 2013ன் பிரிவு 108 மற்றும் நிறுவனங்கள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள், 2015 மற்றும் SEBI LODR விதி 20 மற்றும் பிற விதிகளுக்கு இணங்க, நிறுவனம் அதன் உறுப்பினர்களுக்கு, CDSL வழங்கிய தொலைதூர வாக்களிப்பு மூலம் வருடாந்திர அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து வணிகங்களிலும் மின்னணு முறையில் வாக்களிக்கும் உரிமையைப் பயன்படுத்துவதற்கான வசதியை வழங்குகிறது. தொலைதூர மின்னணு வாக்களிப்பு வசதிக்கான விரிவான வழிமுறைகள் உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்டுள்ள வருடாந்திர பொதுக் கூட்டத்தை கூட்டும் அறிவிப்பில் உள்ளன.

நிறுவனங்கள் சட்டம், 2013 மற்றும் அதன் விதிகளின்படி விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

a. வருடாந்திர பொதுக் கூட்டத்தில் மின்னணு முறையில் வாக்களிப்பதற்கான தகுதியை நிர்ணயிக்கும் கட்ஆஃப் தேதி 22 **செப்டம்பர் 2025, திங்கட்கிழமை** ஆகும்.

b. தொலைதூர மின்னணு வாக்களிப்பு **வெள்ளிக்கிழமை, 26 செப்டம்பர், 2025 (இந்திய நேரப்படி காலை 9.00 மணி) அன்று துவங்கி ஞாயிற்றுக்கிழமை, 28 செப்டம்பர், 2025 (இந்திய நேரப்படி மாலை 5.00 மணி)** அன்று முடிவடைகிறது. அதனைத் தொடர்ந்து மின்னணு வாக்களிப்பு தொகுதி CDSL–ஆல் முடக்கப்படும்.

c. VC/OAVM வசதி மூலம் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் கலந்துகொள்ளும் உறுப்பினர்கள் மற்றும் தொலைதூர மின்னணு வாக்களிப்பு மூலம் தீர்மானங்களில் வாக்களிக்காதவர்கள் மற்றும் அவ்வாறு செய்வதிலிருந்து தடை செய்யப்படாத உறுப்பினர்கள், வருடாந்திர பொதுக் கூட்டத்தின் போது மின்னணு வாக்களிப்பு முறை மூலம் வாக்களிக்கத் தகுதியுடையவர்கள் ஆவார்கள்.

d. வருடாந்திர பொதுக் கூட்டத்திற்கு முன்னதாக தொலைதூர மின்னணு வாக்களிப்பு மூலம் வாக்களித்த உறுப்பினர்கள் VC/OAVM மூலம் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ளலாம்/பங்கேற்கலாம் ஆனால் மீண்டும் வாக்களிக்க உரிமை பெற மாட்டார்கள்.

e. அறிவிப்பை அனுப்பிய பிறகு நிறுவனத்தின் பங்கை வாங்கி, நிறுவனத்தின் உறுப்பினராகி, கட்ஆஃப் தேதி அன்று பங்குகளை வைத்திருக்கும் எந்தவொரு நபரும், helpdesk.evoting@cdslindia.com–க்கு கோரிக்கையை அனுப்புவதன் மூலம் பயனர் ஐடி மற்றும் கடவுச்சொல்லைப் பெறலாம். இருப்பினும், ஒரு நபர் ஏற்கனவே CDSL–ல் மின்னணு வாக்களிப்புக்காக பதிவு செய்திருந்தால், ஏற்கனவே உள்ள பயனர் ஐடி மற்றும் கடவுச்சொல்லை வாக்களிக்கப் பயன்படுத்தலாம்.

f. மின்னணு வாக்களிப்பு, VC/OAVM வசதி மூலம் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் கலந்துகொள்வது மற்றும் பங்குதாரர் மின்னஞ்சல் முகவரியைப் பதிவு செய்வதற்கான நடைமுறைகள் வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பில் வழங்கப்பட்டுள்ளன. இது நிறுவனத்தின் இணையதளம் www.verandalearning.com, சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட்டின் இணையதளம் www.evotingindia.com மற்றும் பங்குச் சந்தைகளின் இணையதளமான பிஎஸ்இ லிமிடெட்டின் www.bseindia.com மற்றும் நேஷனல் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் ஆப் இந்தியா லிமிடெட்டின் இணையதளம் www.nseindia.comஇலும் கிடைக்கிறது.

g. மின்னணு வாக்குப்பதிவு தொடர்பான ஏதேனும் கேள்விகள் அல்லது குறைகள் இருந்தால், உறுப்பினர்கள் திரு. ராகேஷ் தல்வி, மூத்த மேலாளர் (CDSL) சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட், ஏ விங், 25வது தளம், மராத்தான் ஃப்யூச்சர்க்ஸ், மஃபத்லால் மில் காம்பவுண்ட்ஸ், என் எம் ஜோஷி மார்க், லோயர் பரேல் (கிழக்கு), மும்பை 400013–ல் தொடர்பு கொள்ளலாம் அல்லது helpdesk.evoting@cdslindia.com க்கு மின்னஞ்சல் அனுப்பலாம் அல்லது 1800225533 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

வெராண்டா லேர்னிங் சொல்யூஷன்ஸ் லிமிடெட்டிற்காக
ஒப்பம்/–
S பாலசுந்தரம்
நிறுவன செயலாளர் மற்றும் ஒப்புதல் அதிகாரி
(M. No: ACS-11114)

இடம்: சென்னை
தேதி: செப்டம்பர் 06, 2025